காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

8-9-68

விலை 20 காசு



கேள்வி ? பதில்

1. தமிழகத்தில் எத்தனைக் காங்கிரஸ் என்று சொல்ல முடியுமா?

அந்த இழவெல்லாம் யாருக்குத் தெரிகிறது. காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ், கலைஞர் காங்கிரஸ் முதியோர் காங்கிரஸ், இந்தி வேண்டுவோர் காங்கிரஸ், இந்தி வேண்டாதோர் காங்கிரஸ், தமிழை விரும்பும் காங்கிரஸ், தமிழை வெறுக்கும் காங்கிரஸ், ஆங்கிலம் வேண்டும் காங்கிரஸ், ஆங்கிலம் வேண்டாத காங்கிரஸ் திருந்த விரும்பும் காங்கிரஸ், திருந்த விரும்பாத காங்கிரஸ், சுப்பிரமணியம் காங்கிரஸ், காமராசர் காங்கிரஸ் என்று ஒரு நூறுக்கு மேலே இருக்கும்போல் தெரிகிறது. இதன் முழு விவரமும் காங்கிரஸ்காரர்களுக்குக்கூட தெரியுமோ என்னவோ!

2. விலைவாசி விஷயத்தில் காங்கிரசின் பொறுப்பு எப்படி இருக்கிறது?

விலை உயர்ந்துவிட்டது—விலை உயர்ந்துவிட்டது என்று கூப்பாடு போட்டே வியாபாரிகள் விலையேற்றி விற்கும் நிலையை உண்டாக்கிவிடும் அளவில்தான் இருக்கிறது!

3. காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமனுக்குக் கம்பராமாயணம் தலைக்கீழ்ப் பாடமா?

அவருடைய பேச்சுக்களையும், நடவடிக்கைகளையும் கவனிக்கும்போது கம்பராமாயணம் "தலைகீழ்ப்" பாடமாக இருக்கும்போல்தான் தெரிகிறது, இப்படியெல்லாம் பலரும் கேட்பதன் காரணமாக, அவரே அதனைப் புரட்டிப் பார்க்கவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்! பாவம், கருத்திருமன்!! பாவம், கம்பநாட்டாழ்வார்!!

4. கற்பனைச் செய்தி என்றால் என்ன?

காங்கிரஸ் ஏடுகளைப் புரட்டுங்கள்–விளக்கம் கிடைக்கும்!

5. பொய்யும் போற்றப்படும்—எப்போது?

காங்கிரஸ்காரர்கள் வாயிலிருந்து பிறக்கும்போது.

6. காஷ்மீர் விவகாரம் தீர எந்த வழியுமே இல்லையா?

இல்லையென்று யார் சொன்னார்கள்? ராஜாஜி அவர்கள் இது விஷயத்தில் தெரிவித்திருக்கும் கருத்தைச் செயல்படுத்தினால் தானாகத் தீர்ந்துவிடும். இந்தியத் துணைக்கண்டத்துக்கும்பலகோடி ரூபாய்கள் மிச்சம் ஏற்படும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டுமே, இருதரத்துக்கும்!

7. லாட்டரிச் சீட்டு நடத்துவது அரசியல் சட்டத்துக்கு முரண்பாடானது என்றால், மது விற்பனையும் அப்படித்தானே?

காங்கிரஸ்காரர்கள் இருக்கிற பக்கமாகத் திரும்பி நின்று சொல்லுங்கள்!

8. இந்தியா, மொழி மாநிலங்களாக இருப்பதனைச் சிலர் எதிர்ப்பது எதனால்?

இந்தியாவின் ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தினால்! இந்திக்காரர்களுக்கு அடிமையாகிப் போகும் பேராபத்து அதனையொட்டி இருக்கிறது என்பதனை எண்ணிப் பாராததினால்!

9. காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருக்கக்கூடாது; கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று ஒருவருக்கு நீதிமன்றம் தீர்ப்புக் கூறியதே அவர் என்ன ஆனார்?

அவர் அப்பீல் செய்திருக்கிறாராம்! புது முகங்களின் நுழைவுதான் காங்கிரசுக்கு எதிர்காலத்தைத்தரும் என்பது இப்போது சுப்பிரமணியனாரின் கருத்தாக ஆகிவிட்டிருக்கிறது. புது முகங்கள், புகு முகங்களாகிறபோது—யார், யாருக்குக் "கண்ணாடி" மாட்டுவது என்ற பிரச்னையும் எழக்கூடுமே!

10. மொரார்ஜி தேசாய் ராஜினாமாச் செய்துவிடும் அறிகுறி ஏதாவது தென்படுகிறதா?

14 காரட் திட்டத்தைக் கொண்டு வந்தபோது பதவி விலக்கம் செய்யப்பட்டவர் அவர்—காமராசர் திட்டத்தைக்காட்டி! இப்போதும் அதே திட்டம் வேறு உருவில் வந்திருக்கிறது! காமராஜ் திட்டத்துக்கு வேறு உருவத்தைக் காணோமே!

11. உலகத்தில், எந்தெந்த நாடுகளில் போர்க் குமுறலும்—ஏதாவது குழப்பமும் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

கேள்வியை மாற்றிக் கேட்டிருக்க வேண்டும்! எந்தெந்த நாடுகளில் மட்டும் அமைதி இருக்கிறது என்று!

12. மாணவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சொல்கிறீர்களா?

கல்விக் கூடங்களே தேவை இருக்காது என்று சொல்ல வேண்டுமென எதிர்பார்க்கிறீர்களா?

13. கீதையில் ஒரு உப-நிஷத் என்று கூறிய கருத்திருமன் பற்றிய தங்கள் கருத்தென்ன?

அருவருக்குக் கீதையும் தெரியவில்லை—உப—நிஷத்தும் தெரியவில்லை என்று சொல்லலாமா?

14. ஏழைகளின் குழந்தைகளை அரசாங்கமே பாதுகாக்க வேண்டும் என்று காமராசர் பேசி இருப்பது அரசியல்தானே!

அப்பட்டமான அரசியல் கருத்துதான்! கருத்து என்னவோ உயரியதாகத்தான் தெரிகிறது. கழக அரசைப் பொறுத்த மட்டில—நாளா வட்டத்தில் அது நடக்கத்தான் போகிறது தனி முயற்சிகள் ஏதுமின்றி! தங்கள் குழந்தைகளை—எத்தகைய தவிப்புமின்றிக் காப்பாற்றும் நிலை நிச்சயம் ஏற்படத்தான் போகிறது! ஆனால் இருபதாண்டுக் காலம், இதைச் சொன்னவரின் கட்சியே ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்திருக்கிறதே! சொன்னவரே எட்டாண்டுகள் முதலமைச்சராக இருந்திருக்கிறாரே, இதுபோன்ற எண்ணங்கள் ஏன் அவருக்கு உதயமாகவில்லை? பிரச்னைகள், அரசியலாக்கப் படுவது வேறு—அரசியல் — பிரச்னைகளை உண்டாக்குவது என்பது வேறு. பொருள் தெரியாமலா காமராசர் இப்படிப் பேசி இருக்கிறார்?

★

தனக்குத்தானே...

குடிமக்கள் விரும்பி ஏற்காத ஒன்றைச் செய்வதனையே மரபாகக் கொண்டொழுகும் ஒரு கொடுங்கோலாட்சி, எதிர்ப்பார் யாருமின்றெனினும், தனக்குத்தானே அழிந்துபடும்.

வள்ளுவர் —(563)

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 8—9—68 இதழ் 7

இந்தி! அதுவே செந்தீ!!

தமிழக அரசின் கல்விக் கொள்கையை அறைகூவலுக்கு அழைத்திருக்கிறது மத்திய அரசு. தன் அதிகாரத்துக்குட்பட்ட கல்விக் கூடங்களில், இந்திக்கு இடமில்லை என்று சட்டமன்றத் தீர்மானத்தின் மூலம் எடுத்துக் காட்டிவிட்ட பிறகு, மத்திய அரசு, எந்தெந்த வழிமுறைகளைப் பின் பற்ற முடியுமோ—அந்தந்த வகைகளிலெல்லாம் இந்தியை நுழைக்க எடுத்துக் கொள்கின்ற முனைப்பு—காஷ்மீர் விவகாரத்தை முடிவுக்குக் கொணர்ந்து நாட்டை அமைதி வழியில் நடாத்திச் செல்வதில் காட்டக் காணோம்!

எல்லைப் பகுதிகளில் தொல்லை கொடுத்துக் கொண்டு வரும் சீனாவின் திமிரை அடக்கி ஒடுக்கி, பாதுகாப்புத் துறைக்கெனச் செலவு செய்யப்படும் மலையளவு நிதியை மீதப்படுத்தி நாட்டின் நல்வாழ்வுத் திட்டங்களுக்குச் செலவிடும் முனைப்பில் காட்டக்காணோம்!

இந்த தீவிரத்தை.பாகிஸ்தான் ஊடுருவல்களையோ சீனக் கடத்தல்களையோ தடுப்பதிலே எடுக்கப்படுகின்ற முயற்சிகளை அதிகரிப்பதன் மீதும் காட்டக் காணோம்!

தன் முழுவல்லமையையும், ஆற்றலையும்—நாட்டின் அமைதியையும் ஒருமைத் தன்மையும் சீர்குலைத்துக் கொண்டிருக்கிற மொழி விவகாரத்தின் மீது செலுத்தி—நாட்டைத் துண்டாக்கிக் கொடுத்துவிடும் முயற்சிகளில் முழுமனதாகச் செயல்படுகின்ற தன்மையினை எண்ணி வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஒரு நாட்டில் ஒருவன் பிறப்பெடுக்கும்போதே, ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற குடியுரிமையும் அவனுக்குச் சொந்தமாகிப் போகிறது. மனித உரிமைகள் என்று அரசியல் சாசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் அவனுக்கு உண்டு எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள் இவை இவை, அவன் அனுபவிக்கத்தக்கவை இவை, இவை என்று சுட்டிக்காட்டுகின்ற அரசியல் சட்டத்தையே புனிதமானது என்பாரும், பிழைகள் மலிந்தவை என்பாரும் மிகுந்துகொண்டிருக்கிறார்கள்!

பிழைகள் மலிந்தவையே யாயினும், அதுவும் சில உரிமைகள் வழங்கிக்கொண்டிருக்கிறது; வழங்குவதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற அந்த உரிமைகளின் படி—ஒரு நாட்டின் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியை எந்த ஒருவனும் படித்துக்கொள்வதிலே ஆட்சேபணை இருப்பதற்கில்லை.

இந்தியைப் பொறுத்தமட்டில் — அது இந்தியத் துணைக்கண்டம் முழுவதுக்குமான ஒரு பொது மொழி என்று அனைத்துப் பகுதி மக்களாலும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விடவில்லை.

இந்தியை இன்னமும் கேரளா எதிர்க்கிறது. ஆந்திராவில் ஒரு பகுதி எதிர்க்கிறது. மைசூரில் எதிர்ப்புத் தலைகாட்டத் தொடங்கி இருக்கிறது. வங்காளத்தைப் பொறுத்தமட்டில் இந்தி எதிர்ப்புக்கு அதற்கு ஒரு பாரம்பரியமே இருக்கிறது. தமிழகம், சட்டமன்றம் வாயிலாக ஒதுக்கி வைத்திருக்கிறது!

ஒரு பகுதி மக்கள் மட்டுமல்லாமல் நாட்டில் பரவலாக. இந்தியைப் பேசும் மக்களது எண்ணிக்கையைக் காட்டிலும். பேசாதோரின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கும் மேலாகவிருந்து எதிர்ப்புக் காட்டிக் கொண்டு வருகிறார்கள்.

என்றாலும், அதுவே டில்லிக்கு, பிற மாநிலத்தவரை அடிமைப்படுத்திச்செல்ல ஒரு சிறந்த சாதனம் என்ற வகையில், மூர்க்கத்தனமாக முறையில், ஒவ்வொரு பகுதியிலும் நுழைக்க முனைப்புக் காட்டிக் கொண்டு வருகிறது.

சட்ட ரீதியாக தமிழகம் இந்தி ஒழிப்புக்கு நடவடிக்கை எடுத்தபோது துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய், "பொறுத்திருந்து பார்ப்போம்" என்று கூறியவர், இரண்டு வாரங்களுக்குள் "தகுந்த நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது" என்று அச்சுறுத்துவதுபோல எச்சரிக்கையையும் விடுத்திருந்தார்!

தமிழக அரசின் தீர்மானத்தை "மோசடியானது" என்று, அரசியல் மேதை என்ற ஆணவத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற சுப்பிரமணியம் கருத்தறிவித்த பின்னர்கூட, "மோசடியானது" என்பதை நிரூபிக்க முடியாத வகையில் மத்திய அரசு வாய்மூடி மௌனியாகக்கிடந்துவிட்டு — இப்போது புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டிருக்கிறது!

தமிழ்நாட்டில் இந்திப் பிரச்சார சபைகளின் மூலம் 360 இந்திப் பள்ளிக் கூடங்கள் திறப்பது என்பதுதான் அந்த அறிவிப்பு!

இதைவிட "மோசடியான" ஒரு அறிவிப்பு இருக்க முடியும் என்று நம்மால் நம்ப முடியவில்லை.

"தகுந்த நடவடிக்கை" எதுவும் எடுக்க வழியில்லை என்பதற்குப் பிறகுதான் இந்த "மோசடியில்" மத்திய அரசு முனைப்புக் காட்டுகிறது என்பதை இந்தி எதிர்ப்பாளர்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய கட்டம் இது.

இந்தியை எதிர்க்கின்ற மாநிலங்கள் அனைத்தும் முழு மூச்சோடு எதிர்ப்பில் முனைப்புக் காட்டவேண்டிய வேளை வந்துவிட்டிருக்கிறது.

இந்திக்கும், இந்திக்காரர்களுக்கும் அடிமையாக இருக்க விரும்புவோர், இந்த எதிர்ப்பில் அக்கறை காட்டத் தேவையில்லை.

வருங்காலம்—மத்திய அரசின் வேலை வாய்ப்பு—என்ற அச்சுறுத்தலை பிஞ்சு நெஞ்சங்களில் தூவிவிட்டுக்

(4-ம் பக்கம் பார்க்க)

ஜனநாயகத்தின் வெற்றி!

"ஜனநாயகமானது ஓர் ஆட்சி முறையாக மட்டுமிருந்தால் போதாது. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஜனநாயக உள்ளுணர்வு இருக்கவேண்டும்.

அமெரிக்காவைப்போல இந்தியாவும் ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்டுள்ளது.

ஒன்றைச் சோதித்துப் பார்க்கவும், தவறிவிட்டால் திருத்திக்கொண்டு சீரமைத்துக்கொள்ளவும் ஜனநாயகமே வாய்ப்பளிக்கிறது. இந்தச் செயல்முறையே எல்லோரது திறனையும் அறிவையும் ஆற்றலையும் ஒருங்கிணைத்து லட்சிய ஈடேற்றத்துக்குத் துணைபோகச் செய்கின்றது. ஜனநாயகம் ஒன்றில்தான் முடக்குவாதங்கள் ஏற்படுவதில்லை.

சில மாதங்களுக்கு முன் நான் அமெரிக்க நாட்டில் இருந்த நேரத்தில் பிரைமரி தேர்தல்களில் அந்நாட்டார் ஆழ்ந்திருந்தனர்.

இங்கே ஒவ்வொரு கட்சியும் தன் வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கிறது. அமெரிக்க நாட்டில் இந்தத் தேர்வு அடித்தளத்திலிருந்தே நடக்கின்றது. முடிவாக தேசிய மாநாட்டில் ஒருவர் அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் என்று தேர்வு செய்யப்படுகிறார். அதுவரையில் போட்டியிட்டவரெல்லாம் அந்த அறிவிப்பு வந்ததும் தங்கள் கட்சியின் வேட்பாளருக்குப் பின்னால் ஒன்று சேர்ந்து பாடுபடுகிறார்கள்.

அத்தகைய ஒருமுறை உஷ்ணப் பிரதேசமான நமது நாட்டுக்குப் பொருந்துமா? சூடு அதிகமான நமது நாட்டில் அத்தகைய வாய்ப்பில்லை.

அந்த அமெரிக்க நாட்டிலும் சில அதிர்ச்சியூட்டும் துக்ககரமான சம்பவங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. அவற்றைப் பார்க்கும்போது கடுங்கோபம்தான் ஏற்படுகின்றது. வெற்றிகரமான தேர்தல் பிரச்சாரத்தின் மத்தியிலிருந்த கென்னடி சுடப்பட்டார் என்பதையும் அதற்கு முன் அவரது தமையனார் சுடப்பட்டார் என்பதையும் நாமறிவோம்.

துப்பாக்கியும் கையுமாக உலவும் வெறியர் கூட்டத்தின் இத்தகைய செயல்களுக்கு அமெரிக்க நாட்டார் தங்கள் அறிவால், ஆற்றலால், முற்றுப்புள்ளி வைத்தே தீருவர். இந்த பயங்கரங்களுக்குக் காரணமாக உள்ளவர் மிகச் சிலராகவும், ஜனநாயகப் பண்பில் ஊறியவர்கள்—அதை உயர்த்திப் பிடிப்பவர்கள் மிகப் பலராகவும் அந்நாட்டில் இருப்பதை நாமறிவோம்.



இந்திய நாட்டில் அரசியல் கட்சிகள் பேச்சில் சூடுபறக்கும். ஆனால் செயலில் இறங்கும்போது மென்மை தெரியும்—நான்கு பொதுத்தேர்தல்கள் நடந்தேறியுள்ளன, சாதி சமயபேதங்கள் மலிந்து கிடக்கும் நாடு இது. என்றாலும், இங்கு, தேர்தல் சண்டைகளில் பலியானோர் எண்ணிக்கை அமெரிக்காவில் விடுமுறை நாளொன்றில் பலியாவோர் எண்ணிக்கைக்கு ஈடாகாது.

ஜனநாயக இந்தியா மிகப்பெரிய ஆனால் நவீன ஜனநாயக நாடு. அதே சமயத்தில் துரதிருஷ்டவசமாக ஏழ்மையானது. எல்லா ஜனநாயக நாடுகளும் எங்களுக்குப் பக்கபலமாக நிற்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒவ்வொரு குடிமகனின் சராசரி அறிவுக்கு ஒப்பவும், உறுதியானதாகவும், பாதுகாப்பாகவும் உள்ளது ஜனநாயகமே.

அமெரிக்கத் தேர்தல்முறை இந்தியாவுக்கு ஏற்றதல்ல என்பதற்கு மற்றொரு காரணம், அத்தேர்தலில் ஆகின்ற அகோரச் செலவாகும். நமது நாட்டிலும் தேர்தல் செலவுக்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு உயர்த்தப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இங்கும் தேர்தல் செலவுகள் உண்மையிலேயே கூடிவருகின்றன என்பது ஒன்று. மற்றொன்று அயோக்கியத்தனத்துக்கும் ஒரு முடிவிருக்க வேண்டாமா என்ற உணர்வு. செய்கிற செலவையெல்லாம் செய்துவிட்டுப் பொய்க்கணக்குக் கொடுப்பானேன் என்று கருதுகிறார்கள்.

என்ன இருந்தாலும் அமெரிக்காவுடன் இந்தியாவை ஒப்பிடுவதற்கில்லை. அது எல்லாவற்றிலும் பெரிய நாடு. இயற்கை வளத்தில், பணத்தில் பெரியது என்பதோடு, மனத்திலும் பெரியதாக இருக்கும் என்று நம்புவோமாக.

மக்களுக்கு வழிகாட்டியாக வேண்டும். நல்ல காரியங்கள் நடந்தேற நல்வழி காட்டினாலன்றி ஜனநாயகம் வெற்றி பெறாது. இந்தியாவில் நாங்கள் எங்கள் சக்திக்கேற்றமட்டில் ஜனநாயகத்தைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறோம். ஜனநாயகம் ஒன்றே உறுதியானது! பாதுகாப்பானது! மனிதாபிமானத்தோடு கூடியது.

—அமெரிக்கக் கண்காட்சி, திறப்பு விழாவில்

—அண்ணா

3-ம் பக்கத் தொடர்ச்சி

குளிர்காய நினைப்போர் யாரும் இதில் பங்கேற்றத் தேவையில்லை.

இந்திக்கு வால்பிடித்து—அதன் வரவுக்கு வழி திறந்து விடுவோரை, காலம் கவனித்துக் கொள்ளும்.

"துரோகி" என்ற சொல், "தனக்கும்" பொருந்தும் என்று நினைப்போர் ஒதுங்கி இருப்பதிலும் தவறில்லை.

நாடு — மொழி — இனம்—ஒற்றுமை என்று நினைப்போர் யாரும் வாளாவிருக்க முடியாத நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

அதனால் மத்திய அரசின் இந்தித் திட்டம், தனக்குத்தானே வைத்துக்கொள்ளும் 'செந்தீ'யாகத்தான் ஆகப்போகிறது என்பதையும் காணத்தான் போகிறோம்!

வேடனும் வெண்புறவும்

எஸ்.எஸ். தென்னரசு.

6. மரணத்தின் மடி—மணவாழ்க்கைப் பிடி!

தன்னருமை மகள் அல்பாஷியாவைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கிளிஸ் தெனிஸ் சொல்லியனுப்பிய சேதியில் லைகர்கஸ் மன்னனுக்குத் துளியும் நம்பிக்கை இல்லை. பன்னெடுங் காலமாக நிலவிவரும் ஒற்றுமையைக் குலைக்கவே கெல்லாஸ் மன்னன் முடிவு செய்திருப்பதாக அவன் எண்ணினான். பெர்க்ளீசுக்கு அல்பாஷியாவைக் கொடுத்து தெசாலியை அவனிடம் கொடுக்கத் தீட்டிய திட்டத்தை எதிர்ப்பதற்காகவே கிளிஸ்தெனீஸ் மன்னனுடைய மகளை அவமானப்படுத்த முனைந்திருப்பதாகக் கருதினான்.

தெசாலியும், கெல்லாசும் வீரத்தில் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல. போர்க்களத்தில் பகைவருடன் சண்டையிட்டு மன்னர் இருவருமே, விழுப்புண் பட்டு புகழ் மரணம் புகுதலையே உவகையுடன் வரவேற்கும் நல்மரபில் உதித்தவர்கள், ரத்தம் அவர்களுக்குக் களத்துச் சந்தனம்! முறிந்த எலும்புகள் முரசொலிக்கும் பிரம்புத் துண்டுகள்!

கிளிஸ் தெனீசின் பதில் லைகர்கஸ் இதயத்தைக் குத்திவிட்டது. யுத்த பேரிகையைத் தட்டிவிட்டான். கடல் கொந்தளித்ததைப்போல், கானகத்தில் அனல் பற்றியதைப் போல் கெல்லாசிலும் தெசாலியிலும் அமளி ஏற்பட்டுவிட்டது! பிடிபட்டுத் தப்பிய அரவத்தைப்போல் ஒருவரை ஒருவர் சிறுத்துப் பலித்து சீறிக்கொண்டனர்.

நாளும் இடமும் அறிவிக்கப்பட்டன. மண்ணில் கிடக்கும் தவளையைக் குறிவைத்து விண்ணில் பறக்கும் இரு கழுகுகள் ஒரே நேரத்தில் பாய்வதைப்போல் இரண்டு படைகளும் சந்தித்தன. அலறலையும் புலம்பலையும் கேட்டு அண்டை நாடுகள் நடுங்கித் தீர்த்தன. பிண வீச்சமும், ரத்த நாற்றமும் நகரங்களில் சலசலப்பை ஏற்படுத்தின. சண்டை நின்றபாடில்லை. லாபம் நட்டம் யாருக்கென்றும் புரியவில்லை. முயலுக்கும் பூனைக்குமா சண்டை? சிங்கத்திற்கும் சிங்கத்திற்குமல்லவா போர் நடக்கிறது! எளிதில் அடங்குமா?

* * *

பாசறை. புஜபல பராக்கிரமசாலி இருவர் கிளிஸ் தெனீஸ் உடலுக்கு மூலிகை தேய்த்துக்கொண்டிருந்தார்கள். கூடாரத்திற்கு வெளியே தீப்பந்தம் ஏந்திய வீரர்கள் பலர் ரோந்துசுற்றிக்கொண்டிருந்தார்கள். குதிரைகள் அடிக்கடி கனைத்துக் கொண்டிருந்தன.

பாதிராத்திரி வேளையில் திடீரென்று எச்சரிக்கை மணி ஒலித்தது. காவலர்கள் தயாரானார்கள். ஒரு கிழவன் குதிரையை விட்டு இறங்கி மன்னர் கூடாரத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். நாலா பக்கங்களிலிருந்தும் வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

கிழவன் திகைத்தான். கடைசியாக அவன் கையிலிருந்த முத்திரை மோதிரத்தைப் பார்த்தான். அது இளவல் பெர்க்ளீசினுடையது. அதைப் பார்த்ததும் படைவீரர்கள் விலகிக்கொண்டார்கள். கிழவன் அரசர் கூடாரத்திற்குள் போய் இடுப்பில் ஒளித்து வைத்திருந்த ஓலையை மன்னன்முன் படைத்தான்.

தங்கல்:- கருங்கடல் சங்கமுகம்.

அன்புள்ள பிதாவுக்கு,

தெசாலி இளவரசி அல்பாஷியாவுக்கு மரண தண்டனை தந்து, நமது சிறையில் அடைத்திருப்பதாக அவளே எனக்கு ரகசிய முடங்கல் அனுப்பியிருக்கிறாள். அவள் ஆண் வேடத்தில் இருந்ததால் தங்களால் அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை போலும். பெண்கள் அணிமணிகளில் அதிகப் பிரியமுள்ளவர்கள். அதுவும் தமிழ் நாட்டு முத்தையும் பவளத்தையும் அணிந்துகொள்ள விரும்பாத பெண்ணை அகிலத்தில் காண்பது அரிது. ஆண் வேடம் தரித்து அல்பாஷியா முத்து வாங்க வந்த குற்றத்திற்காக தாங்கள் மரண தண்டனை பிறப்பித்துவிட்டீர்கள். இதை என்னால் தாங்க முடியவில்லை அவளைப் பிரிந்து நான் வாழமாட்டேன். அவள் என் உயிர்க் காதலி! என்னோடு என் உயிரோடு இணைந்துவிட்டவள். அவள் தண்டிக்கப்பட்டால் இங்கு நான் செத்துவிடுவேன்,

அன்புச் செல்வன்.

பெர்க்ளீஸ்

ஓலையைப் படித்ததும் கிளிஸ் தெனீசுக்குத் தலை சுற்றியது, திறந்த வெளியில் உடனடியாக ஆலோசனை மன்றத்தைக் கூட்டும்படி ஆணையிட்டான்.

லைகர்கஸ் அவனுடைய படைவீட்டில் தங்கி மறுநாள் போருக்கான ஆய்விலே திளைத்திருந்தான். போர்ச்செய்தியறிந்து, காணாமற் போன பெர்க்ளீஸ் திடீரென்று படை திரட்டிவந்து தலைநகரைத் தாக்கக் கூடும் என்ற அச்சம் லைகர்கஸ் இதயத்தை அடிக்கடி உறுத்திக்கொண்டிருந்தது. சிறு சேனை ஒன்றை அங்கு அனுப்பிவைக்கத்தீர்மானித்து சேனைத் தலைவனிடம் கட்டளையிட்டான் அடுத்தக் கணமே அந்தக் கட்டளை செயல்படுத்தப்பட்டது. வலிவுள்ள ஆயிரம் வீரர்கள் தலைநகர் திரும்பினார்கள். மிகுதியில் சிலருக்குப் பலத்த காயங்கள் ஏற்



பட்டிருந்தன. உருப்படியானவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. சேனுபதிக்கு உள்ளூரக் கலக்கம். ஆனுல் உண்மையை மன்னனிடம் கூறவோ தயக்கம்! திகைத்தான். அப்போது களத்திலிருந்து சமாதானச்சங்கு ஒலித்தது. லைகர்கஸ் ஆவலுடன் எழுந்து வந்து பார்த்தான். வெள்ளைக் கொடியுடன் கூடிய, வீரன் ஒருவன் வெண்புரவி மீது வந்து கொண்டிருந்தான், வந்ததும் அவன் மன்னனை வணங்கி ''கெல்லாஸ் மன்னர் சமாதானத்திற்குத் தயாராக இருக்கிருர்'' என்ருன். தலை தப்பியது என்று தேசாலித் தளபதி நினைத்தான். ஆனுல் லைகர்கஸ் விட்டுக் கொடுக்கவில்லை.

''சமாதானமா? நன்று நன்று! நேற்றுக் காலால் உதைத்த குதிரை இன்று கன்னத்தைக் காட்டுகிறதா கொஞ்சுவதற்கு! இளவரசி அல்பாஷியாவை ஒப்படைப்பதோடு இரண்டு லட்சம் பவுன் அபராதமும் கட்டினுல்தான் சமாதானத்திற்கு ஒப்ப இயலும் என்று உன் மன்னனிடம் தெரிவி!'' என்று அலட்சியமாகச் சொல்லியனுப்பினுன் லைகர்கஸ்,

தூதுவன் முகம் மலர்ந்தது. தேசாலித் தளபதியின் மனம் இருண்டது.

கிளிஸ் தெனீஸ் லைகர்கஸ் மன்னனின் ஆணவப் பதில் கேட்டுக் கிளர்ந்தெழுந்தான். மகனுடைய வேண்டுகோளைக் காட்டிலும் அவனுக்கு மானம் பெரிதாகப்பட்டது. தானே எழுந்து மணியைத் தட்டினுன், வேங்கைபோல் டிராக்கோ ஓடிவந்தான்.

''டிராக்கோ, நாளை இரவுக்குள் தலைநகர்ச் சிறையில் ஆணுடையில் அடைபட்டுக் கிடக்கும் தெசாலி இளவரசிக்கு அளித்த மரணதண்டனையை நீயே நிறைவேற்றிவிடு! போ! வரும்போது அவளது தலைமுடியை அடையாளமாக எடுத்து வா!'' என்று கட்டளையிட்டான். புயல் வீசி ஓய்ந்ததைப்போல், மழை பெய்து நின்றதைப்போல் பாசறையில் அமைதி நிலவியது.

''சேனுபதி! முரசு முழங்கட்டும்! நீதியையும் நேர்மையையும் பின்பற்றிய தர்மப்போர் நேற்ருேடு நின்றுவிட்டது. இன்றுடன் போர் முடிந்தாக வேண்டும். தேசாலிக் கோட்டையில் நமது கொடி பறக்கவேண்டும்; அல்லது எனது பிணத்தின் மீது எதிரிப் படை அணி வகுத்துப் போகவேண்டும்! மானம் காக்கும் போர் வீரர்களே! கௌரவம் மிக்க கெல்லாஸ் மண்டலம் இன்று தன்னுடைய கீர்த்தியைப் பாதுகாக்க உங்களது காலடியிலே மண்டியிட்டுக் கிடக்கிறது. தாய் நாட்டின் பெருமை காக்க, மகன் வேண்டுமா, மானம் வேண்டுமா என்ற மனப்போரில் உங்கள் தலைவன், மானத்தின் பக்கம் சேர்ந்துவிட்டான். ஆம் வீரர்களே, என் அருமை மகன் பெரிக்ளீஸ்—உங்களது இளவரசன் பெரிக்ளீஸ், அல்பாஷியாவைக் கொன்ருல் இறந்துவிடுவேன் என்று செய்தியனுப்பியிருக்கிருன். அவனைக் காட்டிலும் கெல்லாஸ் மண்டலத்தின் புகழே எனக்குப் பெரிதாகத் தெரிகிறது. நம்மைக் கேவலமாகப் பேசிய தெசாலிக்கு உணர்த்த அல்பாஷியாவைத் தூக்கிலிடக் கட்டளை பிறப்பித்துவிட்டேன். டிராக்கோ களத்துக்குப் போய்விட்டான். இந்நேரம் அந்த அரண்மனைக் கிளியை மேடையிலேற்றியிருப்பான். அவள் சாகப்போகிருள். அதுகேட்டு லைகர்கஸ் துடிக்கப் போகிருன். அதே நேரத்தில் என் மகனும் இறந்து போவான் — ஆம், உங்களது இளவரசனும் மடிந்து போவான், எல்லாம் நாட்டுக்காக! நாம் வளர்த்த தேசத்தில் வேறு கொடி பறப்பதா? இந்தக் கிளிஸ் தெனீஸ் அதற்கு உடன்படமாட்டான். தானைக்கதிபர் கட்டளை இடுவார். வானைப் பிளக்கும் முழக்கத்துடன் சேனைப் பிரிவுகள் களம்படவேண்டும். கெல்லாஸ் நமது நாடு. அதுவே நம் அனைவருக்கும் வீடு!! அணி அமையட்டும்! போர்ப்பரணி ஒலிக்கட்டும்!!—கிளிஸ் தெனீஸ் இவ்வாறு உணர்ச்சி மாலை கொடுத்து ஒவ்வொரு வீரன் கழுத்திலும் அணிவித்தான்.

படைக்குப் புதுப்பலம்கிடைத்தது தெம்பு வளர்ந்தது. உயர்ந்த மேடையிலிருந்து ஒரு சிப்பாய் கெல்லாஸ் மண்டலத்தின் புகழை இசைபட வர்ணித்தான். படைவரிசை நேர் கோடுபோல நின்று அந்த நாட்டுப் பாடலுக்கு வணக்கம் செலுத்தியது. பாட்டு முடிந்ததும் வேருெரு முனையிலிருந்து இன்னெரு வீரன் புறப்பாட்டு முரசைத் தட்டினுன். படை வீரர்களின் காலடிகள் அதற்கு தாளம் அமைத்தன. படை அசைந்தது; பின் ஊர்ந்தது; இறுதியில் பறந்தது.

கிளிஸ்தெனீசின் கண்களிலே நீர் வடிந்தது. அது என்ன கண்ணீரா? யாரை நினைத்து அவ்வாறு கண்ணீர் வடிக்கிருன்? மகன் இறந்துவிடுவான் என்பதை நினைத்தா? நாடு தோற்றுப்போய் விடுமோ என்று சந்தேகித்தா? ஒன்றும் புரியவில்லை.

* * *

டிராக்கோ அப்போதுதான் முதன் முறையாக அல்பாஷியாவைப் பார்க்கிருன். அவள் சிறையிலே அடைபட்டுக்கிடந்தாலும் கண்டார் மயங்கும் வண்டார் குழலியாகத் திகழ்ந்தாள். கன்னம் சிவந்த பொன்னழகி

யாய் காவியம் புக·ழும் எழில்வதனி யாய் விளங்கினுள். அதுவரை ஜூனோதான் உலகத்திலேயே சிறந்த அழகி என்று எண்ணிக் கொண்டிருந்த டிராக்கோ, தனது முடிவை அன்று மாற்றிக்கொண்டான்.

"என்னருங் கிளியே, மன்னரின் கட்டளை உனக்கு விதித்த தண்டனையை நிறைவேற்றிவிட வேண்டுமென்று வந்திருக்கிறேன் நான். என் பெயர் டிராக்கோ, மன்னருக்கு மூத்தமகன் நான். மகுடபதியாக வர இருக்கிறேன்!!—என்று அடக்கமாகப் பேசினுன். அவனது உடுப்பிலே மாட்டியிருந்த புலிச்சின்னப் பதக்கம் அல்பாஷியாவைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"நான் எப்போதோ தயாராகிவிட்டேன்; நாம் இப்போது எங்கே போகவேண்டும்? — அல்பாஷியா பவ்யமாகப் பேசினுள். உலகத்தின் மேல் அவள் வைத்திருந்த இச்சைகளையெல்லாம் ஒரு நொடியில் விழுங்கி, அவளுக்கு மட்டுமே தெரிந்த அவளுடைய காதலனுக்காகச் செய்த பெருந்தொண்டுக்கு பரிசு பெறப்போகும் தியாகியைப் போல் பேசினுள்.

ஆரவாரமில்லாமல் அணிவகுப்பு மரியாதை இல்லாமல் இரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு சிறிய வண்டியில் டிராக்கோ அவளை அழைத்துச் சென்ருன் ஒருவரோடு ஒருவர் பேசவில்லை. குதிரை போகும் இடத்திற்கு வண்டி போய்க்கொண்டிருந்தது.

"அல்பாஷியா!"

"உ...ம்!"

"நான் யார்?......மறந்துவிடவில்லையே!"

"இல்லை தண்டனையை நிறைவேற்ற வந்திருக்கிறீர்கள்! பயப்பட மாட்டேன்; வண்டி போகட்டும். நான்தான் சாகத் துணிந்துவிட்டேன் என்றுமுன்பே சொன்னேனே மறந்துவிட்டீர்களா?"

"ஓஹோ! ஆமாம் ஆமாம்! மடையன் நான்தான் மறந்துவிட்டேன்!"

"மரணக்களம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?"

"போய்க்கொண்டே இருப்போம்—களம் வந்தால் தண்டனையை நிறைவேற்றுகிறேன்......!"

"களம் வராவிட்டால் என்னை விட்டுவிடுவீர்களா?"

"விடவா? அது என்ன நடக்கிற காரியமா?"

இப்போது வண்டி வேருெரு பிரிவில் விலகியது. அந்தப் பாதை அருகிலுள்ள மலைச்சிகரத்தில் தெரிந்த ஒரு மாளிகைக்குப் போகக் கூடியது.

"வண்டி இப்போது எங்கே போகிறது இளவரசே!"

"மாளிகைக்குப் போகிறது இளவரசி!"

"மாளிகைக்கா? எந்த மாளிகைக்கு?"

"மரணமாளிகைக்கு என்று பயப்படுகிருயா? நான் கொல்வேனு உன்னை! யாருக்கு மனம்வரும் இந்தக் கிளியைக் கொல்ல! அதுவும் நீ கோட்டையில் வளர்ந்த கிளி."

"இளவரசே!"

"என்ன இளவரசி!"

"இளவரசே!......இளவரசே!"

"இளவரசி! இன்னும் கொஞ்ச தூரம்தான்........வந்துவிட்டோம்!"

—என்று வினயமாகச் சொன்னுன் டிராக்கோ.

வண்டி ஒரு மாளிகைக்குள் நுழைந்தது. மாளிகைக்குள்ளிருந்து ஒரு சிப்பாய் ஓடிவந்து டிராக்கோவை வரவேற்ருன். அது வரவேற்பா, அல்லது மரணத்தின் அரவணைப்பா? அந்த நிலையில் அல்பாஷியாவுக்கு இரண்டும் ஒன்றுதான்! அவள் எடுத்துவைத்த காலடிகள் ஒவ்வொன்றும், அவளை மரண தேவதையின் இருப்பிடத்துக்கு இழுத்துச் சென்றுகொண்டிருந்தன. மரணதேவதையின் மடிமீது ஒரு மணமேடையும் இருக்கிறது என்று அந்தப் பெண் பேதைக்கு உணர்த்த யாருமே இல்லையே!

உள்ளம் என்பது?

உள்ளம் என்பது தேனுய் இருந்தால்
உறவு ஈ மொய்க்கும்—அது
கள்ளம் நிறைந்த தேளாய் இருந்தால்
காட்டுப் பேய் நிற்கும்!

உள்ளம் என்பது கண்ணுடி ஆனுல்
பாசம் பழுத்திருக்கும்—அது
முள்ளை உடைய வனமாய் இருந்தால்
மோசம் விழித்திருக்கும்!

உள்ளம் என்பது நிலவாய் இருந்தால்
வெண்மை குடியிருக்கும்—அது
உருக்கு ஆலை இரும்பாய் இருந்தால்
வன்மைத் தீப் பறக்கும்!

உள்ளம் என்பது விளக்காய் இருந்தால்
உண்மை ஒளியிருக்கும்—அது
உருவம் தெரியா இருளாய் இருந்தால்
புன்மை கொலுவிருக்கும்!

உள்ளம் என்பது மலராய் இருந்தால்
மென்மை சிரித்திருக்கும்—அது
மொட்டு அரும்பாய் கூம்பி இருந்தால்
சூது தரித்திருக்கும்!

உள்ளம் என்பது மதுவாய் இருந்தால்
மயக்கம் துயிலிருக்கும்—அது
உயிரைப் பறிக்கும் நஞ்சாய் இருந்தால்
கொடுமை வெயிலெரிக்கும்!

உள்ளம் என்பது கதிராய் இருந்தால்
அன்பு மழைபொழியும்—அது
பாய்ந்து கொத்தும் பாம்பாய் இருந்தால்
பண்பு கெட்டழியும்!

—'தமிழ்த்தாசன்'

சாட்சிகள் தேவையில்லை

வே.ம.நாராயணன்

"விடுதலை!" "கொலை வழக்கில் தூக்குத் தண்டனை அடைந்தவர்" என்ற தலைப்பிட்டுவிட்டு, அதன் கீழ் "கோவை மாவட்டத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த மிராசுதார் பெரியசாமி என்பவர் மீது நிலத் தகராறு காரணமாக, தனது பக்கத்து ஊர் பரமசிவம் என்பவரைக் கொலை செய்துவிட்டதாகத் தொடரப்பட்ட வழக்கில் கீழ்க்கோர்ட்டில் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை, போதுமான சாட்சிகள் இல்லை என்பதால் ரத்துசெய்து பெரியசாமியை விடுதலை செய்து பெரிய கோர்ட் இன்று தீர்ப்புக் கூறியது" என்ற செய்தியைச் செய்தித் தாள்கள் வெளியிட்டதும் அதைப் படித்துவிட்டு, அந்த வட்டாரம் எங்குமே அதைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

பலரும் பலவிதமாக, அவரவர் விருப்பு — வெறுப்பிற்கேற்ப விமர்சனம் செய்து கொண்டிருந்தனர். சில இடங்களில் விவாதம்கூடச் செய்து கொண்டிருந்தனர்.

வேண்டியவர்கள் சிலர் பெரியசாமியை நேரில் பார்த்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க, அவர் வீட்டிற்கே சென்று வருவது எனப் புறப்பட்டனர்.

அவரது ஆதரவாளர்கள் சிலர், அவரை வரவேற்கத் தீவிரமாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர்.

செய்தி பரவப் பரவ பெரியசாமியின் வீடு, வேண்டியவர்களாலும், உற்றார், உறவினராலும் நிறைந்து கொண்டிருந்தது.

பெரியசாமியின் வீட்டாரும், வேண்டியவர்களும் மகிழ்ச்சியின் எல்லையை நோக்கி ஓட்டப் பந்தயம் நடத்திக்கொண்டிருந்த அந்நேரத்தில், பெரியசாமி மட்டும் பழனியை நோக்கித் தன் காரில் ஓடிக்கொண்டிருந்தார்.

அவர் ஏற்கனவே வேண்டிக் கொண்டிருந்தபடி, தீர்ப்பை அறிந்ததுமே வீட்டிற்குத் தகவல் கொடுத்துவிட்டு நேராகப் பழனிக்குச் சென்றுகொண்டிருந்தார்.

ஆனால் மற்றவர்களைப்போல் அவரிடம் மகிழ்ச்சியின் பிரதிபலிப்பையே காண முடியவில்லை. அதற்குப்பதிலாக வேதனையின் சாயலையே காண முடிந்தது.

அதிலிருந்து, மற்றவர்களின் சாட்சி பொய்யாக இருக்கலாம்— போதுமானதாகவும் இருக்கலாம்— போதுமானதாக இல்லாமலும் இருக்கலாம். அவைகள் எதுவுமே இல்லாவிட்டாலும் மனசாட்சி ஒன்றே போதும் என்பதை அவர் உணர்ந்துகொண்டார் என்று அறிய முடிந்தது.

மனசாட்சி சுய நினைவுடன் இருக்கும்வரை அவர் பூரணமாக மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாது. ஆனால், அதற்காக மனசாட்சிக்கு மயக்க மருந்து கொடுக்கவும் அவர் தயாராக இல்லை.

அவர் தன் காரை முன்னேக்கிச் செலுத்திக்கொண்டிருந்தார்.

ஒருநாள் இரவு. காயம் ஆறினாலும், அதன் தழும்புகள் மாறாத அளவிற்கு, அவரது உள்ளத்தில் தாக்குதல் நடத்தியது அந்த இரவுதான்! அந்த இரவுதான் அவருக்குக் கொலைகாரப்பட்டத்தை வாங்கிக் கொடுத்ததும்கூட.

பெரியசாமிக்கும் அவருடைய பக்கத்துத் தோட்டத்துப் பரமசிவத்திற்கும் நீண்ட நாட்களாக இருந்து வந்த பகையை, பெரியசாமியின் லைசென்ஸ் இல்லாத கைத்துப்பாக்கி தீர்த்துவைத்தது அந்த இரவில்தான்!

"ஏய், பரமசிவம் இனிமேலும் உன் தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்ன ஆனாலும் சரி இன்று இரண்டில் ஒன்று தெரிந்தாகவேண்டும். ஒன்று நீ உயிருடன் இருக்கவேண்டும்; அல்லது நான் உயிருடன் இருக்கவேண்டும்"—பெரியசாமி ஆத்திரத்துடன் கத்தினார்.

"என்னப்பா பூச்சாண்டி காட்டறே? என்னை என்ன மூட்டைப் பூச்சின்னு நெனைச்சுக்கிட்டியா? ஒரு விரல்லே நசுக்கிட்டுப்போக ... இந்தாப்பா, நானும் உன்னைப்போல ஒரு மனுஷன்தான்! உனக்கிருக்கிற வீரம், உனக்கிருக்கிற ரோஷம்...... இன்னும் உனக்கிருக்கிற எல்லாமே எனக்கும் இருக்கும் என்பதையும் கொஞ்சம் எண்ணிப்பார்த்துட்டுப் பேசு" — சற்று எகத்தாளமாகவே கூறினார் பரமசிவம்.

"அதையும் பார்க்கிறேன்......"

"சும்மா பார்த்தா, தெரிஞ்சாலும் தெரியும்; இல்லே, தெரியாமப் போனாலும் போயிடும். எதுக்கும் கண்ணாடியைப் போட்டுங்கிட்டே பாரு."

பரமசிவம் சொல்லி வாய் மூடவில்லை, அதற்குள் 'டுமீல்' என்று ஒரு வெடிச்சத்தம். அதைத் தொடர்ந்து, அலறியபடியே கீழே சாய்ந்தார் பரமசிவம். அதைக் கண்டு பதறி ஓடிவிட்டார் பெரியசாமி.

பதட்டமும், பரபரப்பும் போட்டியிட்டபடி தன்னை ஆக்கிரமித்துக் கொண்டாலும்கூட, ஏதோ திட்ட



மிட்டபடி தன் வீட்டையடைந்தார் பெரியசாமி.

அவர் வீட்டிற்குள் நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம், போலீஸ் அவர் வீட்டை முற்றுகையிட்டது. வலை வீசித் தேடும் அளவிற்கு வைக்காமல், அவர்களிடம் தன்னை ஒப்படைத்துவிட்டார் பெரியசாமி.

வழக்குத் தொடரப்பட்டது. ஜாமீனில் வெளி வருவது கூடக் கஷ்டமாக இருந்தது. பிறகு வெளியூரில் தங்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், ஜாமீனில்விடப் பட்டார்.

பல வாய்தாக்கள்—கீழ்க் கோர்ட்டிலும், மேல் கோர்ட்டிலுமாகப் போடப்பட்ட பிறகு—பல ஆயிரங்கள் கைவிட்டுப் போன பிறகுகூட, தன் கட்சிக்காரரின் விடுதலையைப் பெரிதாக மதித்து வாதாடும் வக்கீலுக்கும், குற்றவாளிக்குத் தக்க தண்டனையை வாங்கிக் கொடுத்தே தீரவேண்டும் என்பதற்காக வாதாடும் எதிர் வக்கீலுக்கும் இடையில், வழக்கின் போக்கைக் கவனித்தவாறு பொறுமையுடன் வீற்றிருக்கும் நீதிபதியைப்போல பெரியசாமியும் பொறுமையுடன் காத்திருந்தார். அந்த இடைக் காலத்தில்தான் அவருக்கு எவ்வளவு படிப்பினைகள்? குற்றவாளியின் வாழ்க்கை எப்படிப் பட்டது என்பதைச் சற்று விளக்கமாக அறிந்து கொண்டிருக்கிறார். அதுமட்டுமா? ஆண்டவனால் படைக்கப்பட்ட ஒரு மனிதன், மற்றொரு மனிதனுக்குத் தன்னிச்சையாக எந்தத் தண்டனையும் கொடுக்கக் கூடாது என்பதையும், அப்படிக் கொடுத்தால் அதன் விளைவாக ஏற்படும் வேதனையையும் அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ள முடிந்ததே அவரால்!

இறுதியாக இன்று, மனிதர்கள் தங்கள் வசதிக்கேற்ப, தாங்களாகவே வகுத்துக் கொண்ட சட்டத்தின்படி, சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஓடிக் கொண்டிருந்த காரைத் திருப்பவேண்டிய இடங்களில் சற்று சிரமப்பட்டுத் திருப்பிவிட்டாலும், பெரியசாமியால் பின்னோக்கியபடியே சென்று கொண்டிருக்கும் தன் நினைவைத் தன்னிடம் திருப்பிக் கொண்டு வரமுடியவில்லை.

தன்னிடம் நிலைத்து நிற்க வேண்டிய தன் நினைவு பின்னோக்கியே சென்று கொண்டிருந்ததால், முன்னோக்கிச் சென்று கொண்டிருந்த காரின் ஓட்டமும் கூடத் தடுமாறியது. பெரியசாமியும் முயன்று பார்த்தார். ஆனால், அவருடைய கட்டுப்பாட்டிற்குள் அடங்காத அவருடைய நினைவைப் போலவே, அவருடைய காரும் அவருடைய கட்டுப்பாட்டை மீறிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது.

கட்டுப்பாடில்லாத மனிதனே சீர்குலைந்து போகும்போது, கட்டுப்பாடில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் கார் என்னவாகும்?

'டமார்' என்ற ஒரு சத்தத்துடன், ரோடில் இருந்த ஒரு பாலத்தில் மோதிக் கவிழ்ந்தது.

உள்ளேயிருந்த பெரியசாமி அந்த இடத்திலேயே உயிர் துறந்தார்.

அன்று காலை, சாட்சிகள் இல்லாத காரணத்தால் குற்றவாளியல்லவென்று முடிவு செய்யப்பட்டு மரண தண்டனையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட அவர் இப்போது, எந்த விசாரணையும் இன்றி யாருடைய சாட்சியமும் இல்லாமலே மரணத்தைத் தண்டனையாகப்பெற்றுக் கொண்டார்.

மனிதர்களால் வழங்கப்படும் நீதிக்குத்தானே சாட்சிகள் தேவை? இது இயற்கையால் வழங்கப்பட்ட நீதியாயிற்றே! இதற்குச் சாட்சிகள் எதற்கு?

தெரிந்துகொள்ளுங்கள்!

சூரியனிலிருந்து வரும் ஒளியில் ஏழு வகையான வர்ணங்கள் இருக்கின்றன. வானவெளியில் மிதக்கும் தூசிப்படலங்கள், ஊதா நீல நிறங்களைத் தவிர மற்றெல்லா நிறங்களையும் கிரகித்துக் கொள்கின்றன. அதனாலேயே வானம் நீலநிறமாக இருக்கிறது. இதைக் கண்டு பிடித்தவர் இந்திய விஞ்ஞானியான சர். சி. வி இராமன்.

ஒரு நோயாளிக்கு உடலில் இரத்தம் குறைவு என்றால், இன்னொருவர் அவருக்குத் தனது இரத்தத்திலிருந்து தானம் செய்கிறார். ஆனால் அப்படி எல்லோரும் கொடுக்கமுடியாது. இரத்தம் பெறுபவருடைய இரத்தமும், கொடுப்பவருடைய இரத்தமும் ஒரே குழு (GROUP) வைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். இந்த வகையில் மனித உடலிலுள்ள இரத்தத்தில் நான்கு குழுக்களிருக்கின்றன அதைத்தான் A, B, AB, O என்று பெயரிட்டுள்ளனர். இவ்வாறு இரத்தத்தில் நான்கு குழுக்களுண்டு என்பதைக் கண்டு பிடித்தவர் கார்ல் லாண்டஸ்டீனர் என்ற ஜெர்மானியர்.

புவியியல் பற்றிப் படிக்கும்போது செங்கடலைப் பற்றிப் படித்திருப்பீர்கள். செங்கடல் என்றவுடன் அது சிவப்பாக இருக்குமென்றே நினைத்திருப்பீர்கள். அதுதான் இல்லை. இதன் ஒரு புறத்திலுள்ள 'எட்டாம்' என்ற மலையின் நிழலே இதில் படிந்துள்ளதாம்; எட்டாம் என்பதற்கு ஹீப்ரு மொழியில் சிகப்பு அதாவது ஆங்கிலத்தில் 'ரெட்' என்று பொருள். இதனாலேயே இக்கடலுக்கு செங்கடல் என்று வழங்கப்படுகிறதாம்!

கலிலியோ கலிலி

கலிலியோ கலிலி அரசுக்குப் பயந்து தன் கொள்கைகளைக் கைவிட்டவர் என்று சொல்வதுண்டு. இருந்தும் ஒரு மேதை. 1564 ஆண்டு இத்தாலி நாட்டில் பைசா நகரில் பிறந்தார். இளமையிலேயே கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் ஆர்வம் மிக்கவராக இருந்தார். ஆர்க்கிமிடீஸ், யூகிலிட் ஆகியோர் எழுதிய விஞ்ஞான கணித நூல்களைப் படித்து தன் அறிவை விசாலப்படுத்திக்கொண்டார். அரிஸ்டாட்டில் நூல்களை இவர் கடைசி வரை வெறுத்தே வந்தார். எந்தப் பொருளும் பூமியை வந்தடையும்போது ஒரே வேகத்தில் வந்திறங்கும் என்றுகூறி, பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தின் மீதிருந்து, பத்து டவுண்டு, ஒரு பவுண்டு ஆன இரண்டு இரும்புக் குண்டுகளைக் கீழேபோட்டு நிருபித்துக் காட்டினர். மேலும் இவர் கண்டுபிடித்தவைகளுள் மிக முக்கியமானவை, காந்தசக்தி, கிணற்றிலிருந்து வெளியே நீர் கொண்டுவரும் கருவி, உஷ்ணமானி, தொலை நோக்கி முதலியனவாகும். இதனல் இவருக்கு பைசா நகரப் பல்கலைக்கழகம் பேராசிரியர் பதவி கொடுத்தது.

தன் உழைப்பால் உயர்ந்தவனுக்குப் பின்னலேயே ஒருவன் குழிதோண்டிக்கொண்டிருப்பான் என்பது வாயளவில் சொல்லும் புதுமொழி. அந்தப் புதுமொழிக்கு பைசா நகரப் பல்கலைக் கழகத் தலைவர்களை உதாரணம் சொல்லலாம். எப்படியாவது கலிலியோவை பல்கலைக்கழகத்தை விட்டு விரட்ட முடிவு செய்தார்கள். இது கலிலியோவுக்கு லேசுபடத் தெரிந்திருந்தும் வாளா இருந்துவிடுகிருர். கலிலியோ மேனட்டு மேதைகளில் ஒருவராக இன்றளவும் திகழ்வதற்குக் காரணம் அவரின் நிதானமே என்று இன்று நமக்குப் புரிகிறது. அவரின்மேல் பல்கலைக்கழகத் தலைவர்கள் சாட்டியக் குற்றத்தைச் சொன்னல் என்னுடன் நீங்களும் சேர்ந்துகொண்டு சிரிப்பீர்கள். கலிலியோ நெடுஞ்சட்டை அணியவில்லை, இது எவ்வளவு பெரிய குற்றம்? என்று அங்கலாய்த்தனர். அதனலேயே கலிலியோ அபராதம் செலுத்த நேர்ந்தது.

தன் சுற்றத்தாரைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் கலிலியோ இருந்தபோதிலும் முதலாம் காசிமோவின் மகனர் கண்டுபிடித்த ஓர் எந்திரத்தை ஆராய்ந்து பார்த்துவிட்டு அதுபயன்படாதென்பதை தைரியமாகக் கூறிவிட்டார். உடனே இளவரசன் இவரைப் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கிவிட்டான். தவறு என்று தெரிந்துவிட்டதை தயக்கமின்றிக் கூறிவிடும் இவரின் துணிச்சல் நமக்கு வியப்பை அளிக்கிறது.

பின் பாதுவா பல்கலைக்கழகம் இவருக்குப் பேராசிரியர் பதவியளித்தது. இவர் புகழும் வளர்ந்தது செல்வமும் குவிந்தது. வெனிஸ் நகரில் 'சாந்த சோபியா' என்ற பாலத்தின் அருகில் ஒரு சிறந்த மாளிகை அமைத்து அதில் கழகம் ஒன்றை நிறுவினர்.

இங்கு பல துறைகளில் அறிஞர்களாக விளங்குபவர்களை ஒன்ருகக் கூட்டி, விவாதிப்பார். பாமரமக்களை அழைத்துவந்து, அவ்வறிஞர்களால் போதனை செய்வித்து அறியாமையைப் போக்கப் பாடுபட்டார். கலிலியோவை, 'அறிஞர்' 'மேதை' என்று புகழ்ந்துரைப்பவர்கள் அப்போது ஏராளமான பேர்கள் இருந்தார்கள். இருந்தும் மற்ற அறிஞர்களை அவர் மதித்து நடந்துகொண்டதை நோக்கும்போது, கலிலியோவின் மேல் மதிப்பு நமக்கு உண்டாகிறது.

பிறகு ''விண்மீன்களின் தூதன்'' என்ற நூல் ஒன்றை இயற்றினர். இந்த நூல் மதத்திற்குப் புறம்பாக உள்ளது என்று அரசு குற்றம் சாட்டி 1616-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ம் தேதி கலிலியோ, நீதிமன்றத்திற்கு இழுத்துவரப்பட்டார். மேதையே! நீங்கள் சொல்லும் கருத்துக்கள் மதக் கொள்கைக்கு புறம்பானவை. இந்த நிமிஷம் முதல் பூமி, சூரியன் முதலியவற்றைப் பற்றி உங்களுடைய சொந்தக் கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அவற்றைப்பற்றி எண்ணவும், சொல்லவும், எழுதவும், விவாதிக்கவும் கூடாது. இது ஆட்சியாளரின் கட்டளை'' என்று உத்தரவும் பிறப்பித்தது. கலிலியோ ஆட்சிக்குப் பயந்து சரியென்று ஒப்புக்கொண்டார். இதை நோக்கும்போது கலிலியோ ஒரு கோழை என்று எண்ணத்தோன்றும். ஆனல் மறுபடியும் வான சாத்திர நூலொன்றை இயற்றி வெளியிட்டார். இதனல் 1633-ம் ஆண்டு ஜனவரி மாதம் உரோமாபுரிக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்கள். அவரும் பைபிளை கையில் வைத்துக்கொண்டு 'என் கொள்கைகளை மாற்றிக் கொள்கிறேன்' என்று கூறினர். ஆனல் அரசு நம்பவில்லை. இவர் பயப்படுவதைப்போல் பாசாங்கு செய்கிருர். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்கிருர். உயிர் இருந்தால்தானே அடுத்த நூல் ஒன்றை எழுத முடியும் அதனலேயே கோழைபோல் நடிக்கிருர் என்று குற்றம் சாட்டி சிறையில் அடைத்தது. நமக்கும் புரிகிறது. கலிலியோ ஒரு கோழை அல்லவென்று.

சிறையிலேயே இயந்திரங்களைப் பற்றி ஒரு நூல் எழுதினர். இவர் எங்கிருந்தாலும் தம் கருத்துக்களை நெடுங்காலம் இருக்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளினல் நூல்களாகவே எழுத விரும்புகிருர் என்று நமக்குப் புரிகிறது. இவ்வுலகமும் பின் புரிந்துகொண்டது—கலிலியோ கலிலி ஒரு மேதைதான் என்று.

1642-ம் வருஷம் ஜனவரி 8-ஆம் நாள் பூதவுடல் நீத்துப் புகழுடல் பெற்ருர்.

—ஆர். வெங்கடகிருஷ்ணன்.

மாண்புமிகு அமைச்சர்

மா. முத்துசாமி

அவர்களது

இரஷ்யப் பயணம்

பற்றிய தொடர் கட்டுரை

விரைவில் காஞ்சியில் வெளியாகிறது.

கண்ணம்மா கடத்தப்பட்டாள்!

அன்புள்ள நண்பா!

விடிந்தால், மேளதாளங்கள் முழங்க, மங்களம் காட்டும் மஞ்சள் கயிற்றில் கோக்கப்பட்ட தாலிகட்டிக் கொண்டு, ஒருவனுக்கு மனைவியாக மாறிவிடப்போகும் சடங்கு கண்ணம்மாவுக்கு.

விடியப் போகிறவேளை. ஒலி பெருக்கி உச்சஸ்தாயியில் ஒலி எழுப்பிக் கொண்டிருக்கிறது. காதல் பாட்டுக்களையும், கூடவே கண்ணராவிப் பாட்டுகளையும், ஊடல் பாட்டுக்களையும் உல்லாசப் பாட்டுக்களையும் தன் இஷ்டம்போல் ஒலி பெருக்கிக் கொண்டிருக்கிறது.

பாடல்களின் இன்ப லயிப்பில் தங்கள் இறந்த காலத்தை எண்ணிச் சிலரும் வருங்காலத்தை எண்ணிச் சிலரும் மெய்ம்மறந்து கிடந்தனர். சிலர் தூக்கம் கெடுகிறதே என்ற ஆத்திரத்தைக் காட்ட முடியாமல் அங்கலாய்த்துக் கொண்டு அப்படியும் இப்படியுமாகப் புரண்டு படுத்துக்கொண்டிருந்தனர்.

கல்யாண வீட்டாரோ, காரியம் மங்களகரமாக முடிவுபெறச் செய்யவேண்டிய பணிகளில் சுறுசுறுப்புக் காட்டிக்கொண்டிருந்தனர்!

ஒரு பரபரப்பு ஒரு மூலையிலிருந்து பதட்டக்குரல் எழுகிறது. படுத்துக் கிடந்தவரும் பறந்து கொண்டிருந்தவரும் விழிக்கிறார்கள். எதிர்ப்பட்டோர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கின்றனர். பார்வையில் வினாக் குறி! பதில் யாருக்கும் தெரியவில்லை.

வினாக்குறி கொண்ட முகங்கள் அனைத்தும் ஒரு புறத்தில்—பரபரப்புக் காட்டப்பட்ட அந்த இடத்தில் கூடுகின்றன!

பெண்ணைக் காணோம்!

எந்தப் பெண்ணை? எல்லப்பன் கல்யாண வயதில் இருக்கும் தன மூத்தப் பெண்ணுடன் அங்கு வந்திருந்தானே, அவளையா?

ஏகாம்பரத்தின் இளம் மனைவி இரஞ்சிதம்! அழகாக இருப்பாள்! அவள் மீது ஆனந்தனுக்கு ஒரு மயக்கம் இருந்தது. அவளையா காணோம்?

கல்யாணப் பெண் கண்ணம்மாவின் தங்கை—கமலா! அவளும் கல்யாணத்துத் தயாராகி இருப்பவள் தான்! அவளாக இருக்குமோ?

"பைத்தியங்களா! கல்யாண வீட்டில் பெண்ணைக் காணோம் என்றால் என்ன பொருள்? மணப் பெண்ணைக் காணோம் என்றல்லவா அர்த்தம்! இருக்குமிடத்தை விட்டு — இல்லாத இடந்தேடி..................என்ற பாட்டைப்போல உண்மையைப் புரிந்துகொள்ளாமல் ஆளுக்கொரு விதமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே! மண்டுகங்களே! மணமகளைத்தான் காணோம்! கண்ணம்மா காணமல் போய்விட்டாள்!" என்று விளக்கினார் அருகில் இருந்த பெரியவர் ஒருவர்.

பரபரப்படைந்திருந்த கூட்டம் விஷய விளக்கம் பெற்றது. வினாக்குறி முகங்கள் வியப்புக்குறி முகங்களாயின!

ஒருவர் அடுத்தவரின் காதில் மெள்ள கிசுகிசுத்தார்; "எனக்குத் தெரியும்! கண்ணம்மா அந்தக் காலிப் பய கந்தசாமியைப் பார்த்து மயங்கிக் கிடந்தா. அந்தக் காலியும் இவளையே சுத்திக்கிட்டிருந்தான். இப்படி நடக்கும்னு அப்பவே தெரியுமே!"

"சே! சே!! கண்ணம்மாவைப் பத்தி அப்படியெல்லாம் சொல்லக் கூடாது; அடக்கமான பொண்ணு. கல்யாண மாப்பிள்ளையைப் பிடிக்கலேன்னு ஆன மட்டும் அவ அப்பன்கிட்டே சொல்லிக்கிட்டிருந்தது என்னமோ உண்மைதான்! அதுக்காக இப்படி அபாண்டமா பேசக் கூடாது. அவ ஓடிப்போய் இருக்கமாட்டா. எங்காவது ஒளிஞ்சிக்கிட்டிருப்பா! நல்லா தேடனும்" இன்னொருவர் இடைமறித்தார்!

'மாப்பிள்ளையைப் பிடிக்கலேன்னு பொண்ணு சொல்லி இருக்கிறப்போ, கல்யாணத்தை நிறுத்தி இருக்கணும். இந்தக் காலத்திலே பெத்த பொண்ணுங்களாகட்டும், புள்ளைங்களாகட்டும் பெத்தவங்க பேச்சை மதிக்குதுங்களா! தலைக்கு ஒசரமா வளர்ந்துட்டதுக்கப்புறம், பெத்தவுங்களும், புள்ளைங்க போக்குக்குக் கொஞ்சம் வளைஞ்சுக் கொடுத்துதான் போகணும். இல்லேன்னா இப்படி அவமானப் படத்தான் வேணும்!

'நான் நேத்தே சந்தேகப்பட்டேன்! அந்த கந்தசாமி, நேத்துசாயந்திரமா, அந்தக் கோடிக்கும், இந்தக் கோடிக்கும் நடையா நடந்து நடை பழகிக்கிட்டிருந்தான்! ஏதோ திட்டம் போட்டுக்கிட்டுதான் அவன் நிற்கிறான்னு நான் நெனைச்சேன்! பொண்ணையே தூக்கிக்கிட்டு போய் ஒளிச்சிவைக்கிற அளவுக்கு நடக்குமனு நான நெனைக்கலே! அந்த நெனைப்பு வந்திருந்தா, முன்னேற்பாடா எதை

யாவது செஞ்சிருக்கலாம்! நாமே கூட பொண்ணை அடைச்சி வச்சிருக்கலாம்.''

விவாதங்கள் வளர்ந்துகொண்டிருந்தன. பெண் வீட்டாரும், பிள்ளை வீட்டாரும் கொலை செய்து கொள்ளும் ஒரு முயற்சியில்தான் ஈடுபடவில்லை. மற்றபடி அனைத்துக் காரியங்களும் தாராளமாகவே ஒருபுறத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதுபோலவே வேறோர் புறத்தில் விவாதங்கள் தொடர்ந்துகொண்டிருந்தன.

''நீங்க சொல்றதைப் பார்த்தா கண்ணம்மாவை கந்தசாமிதான் கடத்திக்கிட்டுப் போயிருக்கணும்னு தோணுது!''

''தோணுது என்ன? அவன்தான் கடத்திக்கிட்டுப் போயிட்டான்! சந்தேகமே இல்லை. கண்ணம்மாவைக் கடத்திக்கிட்டுப் போனது கந்தசாமியேதான்!

கல்யாணம் தடைப்பட்டுவிட்டது. மங்கள கீதம் முழக்கிக்கொண்டிருந்த ஒலி பெருக்கி, சோக கீதம் பாடத் தொடங்கியது.

"வாழ்வே மாயம்'' என்ற பாடலைத் தொடங்கியது அது. ஆத்திரமடைந்த ஒருவர் ஓடிப்போய் அதைத் தடுத்து நிறுத்தினார். அப்புறம் அதன் ஒலி எழாமலே போய்விட்டது, குரல்வளை நெறிக்கப்பட்டு விட்டது போலும்!

தந்திகள் பறந்தன! ஆட்களும் பறந்தனர். ஆளுக்கொரு பக்கம் ஓடினர், தேடினர்!

தாம்பரத்திலிருந்த தணிகாசலம், தந்தி கிடைக்கப் பெற்று, தங்கத்திடம் சொல்லிக் கொண்டிருந்தார்:

"பாரு தங்கம்! இந்தமாதிரி அக்ரமம் எல்லாம் நடக்கக்கூடாதுன்னுதான் நான் அப்பவே, கண்ணம்மாவுக்கு இந்த இடம் வேணாம்னு சொன்னேன்! கேட்டாங்களா? உன் தம்பி கந்தசாமியும் இப்படிசெய்திருக்கக் கூடாது. என்ன இருந்தாலும் அந்தப் பொண்ணும் அவனோட ஓடி இருக்கப்படாது! அக்ரமம்! அக்கிரமம்!''

''கண்ணம்மாவை இழுத்துக்கிட்டு கந்தசாமி ஓடிட்டானா! அநியாயம்! அடுக்காது இது! கந்தசாமியைத் தண்டிக்கத்தான் வேணும்!

தங்கம் தீர்ப்புக் கூறிவிட்டாள்! செய்தி, செய்தி இதழ்களை எட்டி சுவையான—பரபரப்பான—சூடான முறையில் நாலு பத்தித் தலைப்போடு வெளியாயிற்று.

கந்தசாமி என்னவோ. கண்ணம்மாவைக் காதலித்தது உண்மைதான்! கல்யாணம் செய்துகொண்டு வானவீதிகளில், வண்ணப் புறாக்களென வட்டமிட்டுத் திரிய கற்பனைக் கோட்டைகள் கட்டியதும் உண்மைதான்! அதுபோலவே, கண்ணம்மா, தன் வாழ்க்கைத் துணைவனாக கந்தசாமியையே வரித்துக் கொண்டாள்—நம்பி இருந்தாள் என்பதிலும் பொய் இல்லை. இப்போது அவளைக் காணவில்லை என்ற செய்தியிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

கண்ணம்மாவைக் கடத்தியது கந்தசாமிதானா? கந்தசாமியே சொல்கிறான்!

''அபாண்டமான பழி! கண்ணம்மாவை நான் கடத்திப் போகவில்லை. கல்யாண வீட்டார்தான் ஒளித்து வைத்திருக்க வேண்டும்! எதற்கோ பயந்து இப்படிச் செய்திருக்கிறார்கள்! கண்ணம்மா கடத்தப்பட்டாள் என்பதே தவறு! என்றால் நம்ப முடியாது! நம்பவே மாட்டேன்!''

இதையும் சிலபேர் நம்பத்தான் செய்தார்கள். இந்த நம்பிக்கை தாம்பரம் தணிகாசலம்வரைப் போய் நின்றது. அவர் சொன்னார்:

கந்தசாமி, கடத்திக் கொண்டுபோய் இருக்கிறான் என்பதற்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கண்ணம்மாவின் பெற்றோர் கூட அவளைப் பார்க்க அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். கண்ணம்மா கடத்தப்பட்டது உண்மையே,''

என்று செய்தியை உறுதிப்படுத்தினார். பிள்ளை வீட்டாரும் இதனை உறுதிப்படுத்தி செய்தி இதழ்களுக்குச் செய்திகள் தந்தனர்.

''கண்ணம்மாவைக் கடத்திப்போனது கந்தசாமிதான்!''

என்று ஒப்புதல் வாக்கு மூலமும் கொடுத்துவிட்டனர்.

ஏடு, இதழ்கள்வரை எட்டி, ஊராரை, உற்றார், உறவினரை எல்லாமே பெரும் பரபரப்புக்கு ஆளாகி விட்ட செய்தி, பலப்பல விதமான விமர்சனங்களுக்கும் ஆளாகி நின்றது.

கண்ணம்மா எங்கே இருக்கிறாள்? கடத்திச் செல்லப்பட்டாள் என்ற செய்தி உண்மையானதா?

கந்தசாமியுடன் ஓடிப்போனாளா? அல்லது அவனே, அவளை கடத்திப் போனானா?

தணிகாசலம் திட்டவட்டமாகக் கூறுகிறார். பிள்ளை வீட்டாரும் அதுவே சரி என்கிறார்கள், கந்தசாமியும் திட்டவட்டமாக மறுப்பதுடன், இது பிளளை வீட்டாரின் சதிதான் என்று வேறு குற்றச்சாட்டு எழுப்புகிறான்.

உண்மைதான் எது? கண்ணம்மாதான் கூறவேண்டும்! அவள் எங்கே இருக்கிறாள்?

நண்பா! கண்ணம்மா கடத்தப்பட்ட செய்தியை, பாண்டிச்சேரி அமைச்சரவைச் செய்தியுடன் கொஞ்சம் ஒப்பிட்டுப்பார்!

ஆகஸ்டு மாதம் 29-ம் நாள், சட்டமன்றம் கூடவிருந்தது! முதல் நாள் 4 எம். எல். ஏ.க்கள் கடத்திச் செல்லப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தியும் இதழ்களை அலங்கரித்தது.

முன்னாள் முதலமைச்சர், பரூக்மரைக்காயர் பாண்டிச்சேரி கவர்னர் சீலம் அவர்களிடம், சட்டமன்றக் கூட்டத்தை ஒத்திவைக்கும் சதி நடைபெறுகிறது—கூட்டம் கூட்டப்பட்டால், எம். எல். ஏ.க்கள் கட்சி மாறி இருப்பதனால், காங்கிரஸ் அமைச்சரவை கவிழ்ந்துபோகும் என்பதனால், இந்தச் சதிச் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒத்திவைக்க அனுமதிக்கக் கூடாது என்று கேட்டு மனு கொடுத்திருப்பதுடன் இதே செய்தியை காங்கிரசுத்தலைவர் நிஜலிங்கப்பாவுக்கும், பிரதமர் இந்திரா அம்மையாருக்கும் தந்திமூலம் தெரிவித்திருக்கிறார்.

தந்தியைப் பெற்றுக்கொண்ட காங்கிரசுத் தலைவர்—எம். எல். ஏ.க்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைத் தருகிறார்.

செய்தியைப் படித்த பரூக்மரைக்காயர், யாரும் கடத்தப்படவில்லை. சட்டமன்றக் கூட்டத்தை ஒத்திப்போடச் செய்யப்பட்ட சதியே இது என்று மறுக்கிறார்.

மறுப்புக்கேட்ட காங்கிரஸ் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார், அப்போதுதான, ''எம். எல். ஏ.க்கள்

கடத்தப்பட்டிருப்பது உண்மையே'' என்று விளக்கம் தருகிறார்.

இதுகேட்டு இந்தியப் பிரதமர் — சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்ட செய்தியறிந்து மகிழ்ச்சி அடைவதாகச் செய்திவிடுக்கிறார்.

நிஜலிங்கப்பாவும் இந்திரா அம்மையாரும் கூடிப் பேசுகிறார்கள்.

ஜனநாயகம் காப்பாற்றப்பட்டதாக அந்தத் திசையிலிருந்து செய்தி வருகிறது. அதே வேளையில் ஜனநாயகத்தின் குரல்வளை நெறிக்கப்பட்டுவிட்டதாக பரூக்மரைக்காயர் அறிவிக்கிறார்!

தமிழ்நாட்டிலும் ஒரு கட்சி அமைப்பு இருக்கிறது. காங்கிரஸ் என்ற பெயரையும் அது சுமந்துகொண்டிருக்கிறது. அதற்குத் தலைவரும் இருக்கிறார்! முன்னாள் தலைவரும் உயிரோடேயே இருக்கிறார்! உலா வந்து கொண்டு இருக்கிறார்! காரசாரமாக அறைகூவல் விடுத்துக்கொண்டு இருக்கிறார்.

பாண்டிச்சேரி அரசியலை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்ட தலைவரும் இருக்கிறார்! கண்ணையும், காதையும் மூடிக்கொண்டிருக்கிறார்! வாயும் மூடியே கிடக்கிறது.

பாண்டிச்சேரி செய்திகள் பற்றி நிஜலிங்கப்பாவும், இந்திரா அம்மையாரும், வெங்கடசுப்பா ரெட்டியாரும், பரூக்மரைக்காயரும், சூடான சுவையான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சுப்பிரமணியனாரைக் காணோம்! பாவம், காமராசரைக்கூட காணவில்லை!!

காணாமற்போன கண்ணம்மா, திடீரென ஒருநாள் வீட்டில் வந்து நிற்கிறாள். அவள் வீட்டிலல்ல! கந்தசாமி வீட்டுக்கு எதிரில்.

"தன்னை யாரும் கடத்திப் போகவில்லை!
கந்தசாமியும் கடத்திப் போகவில்லை''
என்று கூறிவிட்டு, கந்தசாமியின் தாலிக்கயிற்றுக்காக கழுத்தை நீட்டியபடி நிற்கிறாள்!

அந்த நிலையிலும் தணிகாசலம், நீ கடத்தப்பட்டாய் என்கிறார்! தங்கம் ஆமாம் என்கிறாள். பிள்ளை வீட்டாரும் அதனையே எதிரொலிக்கிறார்கள்.

கண்ணம்மா இனி, ஏற்பாடு செய்யப்பட்ட மணமகனுக்குக் கழுத்தை நீட்டப் போவதில்லை. கந்தசாமியின் பக்கமே அது நீண்டு கொண்டிருக்கிறது என்பதும் நன்றாகத் தெரிகிறது. என்றாலும் கடத்தப்பட்டாய் என்கிறார்கள்! எப்படியும் தன் மகனுக்கு மனைவியாக்கிட வேண்டும் என்ற முறையில் எதை எதையோ சொல்கிறார்கள்! பேசுகிறார்கள்! அடுத்த முகூர்த்த நாள் குறிக்கப்படுகிறது. அந்தநிலையில்தான்—

"நாங்கள் யாரும் கடத்தப்படவில்லை'' என்று நான்கு எம். எல். ஏ.க்களும் கூறுகிறார்கள்.

முகூர்த்தநாள் செப்டெம்பர் 12—ஆம்! கண்ணம்மாவின் கழுத்து கந்தசாமியின் பக்கம் சாய்ந்திருப்பது தெரிகிறது! என்றாலும் அந்த முகூர்த்த நாள் வரையில் பொறுத்திருந்துதானே பார்க்கவேண்டும்!

வெங்கடசுப்பா ரெட்டியாரின் அமைச்சரவை பிழைக்குமா? பரூக்மரைக்காயரே மீண்டும் முதலமைச்சராவாரா? செப்டெம்பர் 12 தீர்ப்புரைக்கும்—மறுபடியும் சட்டமன்றம் ஒத்திவைக்கப்படாவிட்டால்!

நடக்கப் போவது எது? பொறுத்திருந்து பார்ப்போமே!

அன்புள்ள,
திருவாரூர்-முத்துராமன்,

காஞ்சி

4-ம் ஆண்டு மலர்

தந்தால்-தந்தால்-தருவேன்!
(அமைச்சர் மா. முத்துசாமி)

அரிமா நோக்கு!
(என். வி. நடராசன்)

விரலுக்குத் தக்க வீக்கம்!
(மா. கி. தசரதன்)

எனது பயணம்!
(அரங்கண்ணல்)

மெய்யறிவு!
(அ. மு. பரமசிவானந்தம்)

இரவு என்ற குருவி!
(சோமு)

ஆகா! ஜப்பான்!
(அண்ணல்)

இரட்டைக் கொலை!
(எஸ். எஸ். தென்னரசு)

முதலான கருத்துக் கருவூலங்களோடு

அறிஞர் அண்ணாவின்
அமெரிக்கப் பயணத்தில்....!

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம், I A S. அவர்களது புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்

அறிஞர் அண்ணா அவர்கள்

படைக்கும் தீஞ்சுவைக் காப்பியங்கள் பலவோடு

செப்டம்பரில் வெளிவருகிறது!

இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

ராஜிமணாளன்

தொகுத்தவை.

அந்தநாள் வந்திடுமா?

வளர்ந்து வரும் கிராமங்களிலும் சரி, வளர்ந்துவிட்ட நகரங்களிலும் சரி, ஏதாவது ஒரு பெயரில் பூமியைத் தோண்டி போக்குவரத்துக்கும், நடைபாதைகளுக்கும் இடையூறு உண்டாக்குவதென்பது நீண்ட நெடுநாளைய பழக்கம் அல்லவா! டெலிபோன் கம்பிகள் அமைப்பதாலும், மின் கம்பிக் குழாய்கள் புதைப்பதாலும், தண்ணீர்க் குழாய்கள் போடுவதாலும் இவைகளில் பழுது பார்க்கப்படுவதற்காலும் பூமி தோண்டப்படும்! ஒருமுறை தோண்டப்பட்டுவிட்டால், அப்புறம் அது மீண்டும் செப்பம் செய்யப்பட ஆண்டுக்கணக்குகளை எண்ணிக்கொண்டிருக்கவேண்டும்! இந்த தலைவிதி இந்த நாட்டுக்கு மட்டும் சொந்தமல்ல! உலகின் வளர்ந்துவிட்ட மிகப் பெரும்பாலான பகுதிகளுக்கும் உரிமையுடையதாகவே இருக்கிறது. போக்குவரத்துக்கு இது எவ்வளவு பெரிய தடை என்பது தோண்டப்பட்ட பகுதிகளில் இருப்போருக்குத்தான் தெரியும்! இந்தக் கொடுமையை ஒழிக்க பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று புதியதொரு இயந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளதாம்! பூமியைத் தோண்டாமலே நீர்க்குழாய்களையும், தொலைபேசிக் கம்பிகளையும், மின்கம்பிக் குழாய்களையும் அது சுறுசுறுப்பாக புதைத்து விடுகிறதாம்! 8 மணி நேரத்தில் 300 கெஜ தூரத்துக்குப் பூமியைக் குடையாமல் குழாய்களைப் பதிக்கிறதாம்! தமிழ்நாட்டுக்கு அது வரும்நாள் எந்நாளோ!

சிறுபான்மையில் பெரும்பான்மை!

பொதுத் தேர்தல் என்றுப் மட்டும் அல்ல—இடைத் தேர்தல் என்றால் மட்டும் அல்ல—தேர்தல் என்றாலே மக்கள் அனைவருக்கும் ஏதோ ஒருவித அதிருப்தி நிலவிக்கொண்டிருக்கத்தான் செய்கிறது. இந்த அதிருப்தி காரணமாகவே பலர். வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கத் தயங்குகின்றனர். சிலர் வாக்குச்சாவடிகளின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க விரும்புவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் தேர்தல் முறையில் ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது என்பதுதான். இந்த நிலையில் ஒரு தொகுதியில் பெரும்பான்மைக் குறைவாக சுமார் 30 சத வீதமே வாக்குப் பதிவானால்கூட, பதிவானதில் சுமார் 16 சத வீதம் பெறுவோர் வெற்றி பெற்றுவிட்டதாக அறிவிக்கப் பெறுவதும், அவ்வாறு அறிவிக்கப் பெற்றவர் 100 சத வீத மக்களுக்கும் பிரதிநிதி என்றாக்கப்படுவதும் நம் தேர்தல் முறையில் உள்ள மிச முக்கியமான குறைபாடு. இதுபோன்ற குறைபாடுகள் நம் ஜனநாயக நெறியின் ஆணிவேரையே தகர்த்து விடக் கூடியன. இதுமட்டுமல்லாமல் அரசியல் கட்சிகளின் பிரசார முறைகள், அணுகு முறைகள் யாவும் கூட அதிருப்தியைத் தோற்றுவிப்பனவாகவே இருக்கின்றன. இதுபோன்ற அதிருப்திகள் காரணமாக பெரும்பான்மை வாக்கு அளிக்கப்படாமல் போவதுடன் சிறுபான்மையில் பெரும்பான்மை பெறுவோர் வெற்றி வாய்ப்புக்கு உரியராகின்றனர். பிரதம தேர்தல் அதிகாரி சென்வர்மா கூறி இருப்பதுபோல, அனைவரையும் கட்டாயமாக வாக்களிக்கச் சட்டம் செய்ய வேண்டுவது மட்டும் முக்கியமல்ல — இதுபோன்ற பலதரப்பட்ட அதிருப்தி நிலைகளையும் மாற்ற முயற்சி மேற்கொண்டு வெற்றி ஈட்டியபின், அதனைச் செயல்படுத்த முனைந்தால்தான் 100-க்கு 100 சத வீதம் வாக்குப் பதிவு வெற்றிகரமானதாக இருக்க முடியும்!

காங்கிரசுக்கு அறைகூவல்!

"தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டும். எவர், அவர்களுக்கு உரிமைகள் தரமறுக்கிறார்களோ, தீண்டாதவர்களாக எண்ணி நடத்துகிறார்களோ, அவர்களை நாமே தீண்டாதவர்களாக மதித்து ஒதுக்கவேண்டும். இதற்கு அனைவரையும் அறைகூவி அழைக்கிறேன். வாருங்கள்! போராடுங்கள்! போராடுங்கள்!! போராடுங்கள்!!!" என்று ஆவேசமாக அழைப்புவிட்டிருக்கிறார் மத்திய அரசின் உணவமைச்சர் ஜெகஜீவன்ராம்! அவரது பேச்சைப் படிக்கும்போது நமக்கும் ஆவேசம் ஏற்பட்டுவிடுகிறது—கூடவே, ஐயமும் பிறந்துவிடுகிறது. சுதந்திரப் போருக்கு காந்தியடிகளின் தலைமை ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்திலிருந்து தீண்டாதார் விஷயத்தில் காங்கிரஸ் பேசிக்கொண்டே வருகிறது. கடந்த இருபதாண்டுக் காலத்தில் நாடெங்கும் அதன் சர்வாதிகார பிடி இறுக்கமாகத்தான் இருந்தது! இப்போதும் ஜெகஜீவன்ராம் அங்கம் வகிக்கும் மத்திய அரசு, காந்திக் கட்சிதான்! என்றாலும் ஆவேசமாகப் பேசும் அளவுக்கு இன்னமும் நிலைமை இருக்கிறதென்றால், இதுவரை காங்கிரஸ் என்னதான் செய்தது! கழகம் ஆட்சிக்கு வந்து 18 மாதங்கள்கூட முடியவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாக அவலக் குரலெழுப்பிக் கொண்டு வருகிறார்கள் அகப்பட்டதைச் சுருட்டும் அரசியல் நடாத்தும் தமிழக காங்கிரசார். இப்போது உணவமைச்சரின் பேச்சு எதைக் காட்டுகிறது. நேரம் பார்த்து தமிழகக் காங்கிரசின் முகத்தில் கரிபூசி இருக்கிறார் ஜெகஜீவன்ராம்! அதோடு காங்கிரஸ்கூட கடந்த காலத்தில் தீண்டாதார் கொடுமையை ஒழிக்க ஏதும் செய்யவில்லை என்று ஒப்புதல் வேறு கொடுத்துவிட்டாரே, தமிழகக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுமா இதனை!

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஆகஸ்டுமாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'

இரவில் இரவு

செம்பரிதி மேல்வானிற் சேர்ந்தான்; மாந்தர்
செய்வினைகள் தீர்ந்தவராய் இல்லம் சேர்ந்தார்!
நம்பிக்கை மிக்கவராய் வலைகள் எல்லாம்
நைந்தறுந்து போமளவும் மீன்கள் கொண்டு
செம்படவர் இசைபாடிக் கரையைச் சேர்ந்தார்!
சிறையிட்ட அலுவலகத் தளையின் நீங்கித்
தெம்புபெறக் கடற்கரையை நானுஞ் சேர்ந்து
திரையெழுந்து விழுமழகில் திளைத்திருந்தேன்!

போரின்றி அமைதியிலே பொலிந்த நாட்டிற்
புகவந்த பகைவன்போல் என்னை நோக்கி
நேரின்றிப் பேரழகு வாய்த்த தென்ற
நினைப்புடையாள் போலொருத்தி வந்தாள் ஆங்கே!
கூரின்றி அமைந்தவிழி யம்பால் என்னைக்
குறிபார்த்துக் கொண்டேஎன் அருக மர்ந்தாள்.
ஏரின்றி உழச்சென்ற உழவன் போல
என்னிலையை எண்ணாமல் அவளைப் பார்த்தேன்.

மையில்லை அவள்விழியில்! ஆனால் அங்கே
மயக்கத்தின் மதுவுண்டு! நகைசு மந்த
மெய்யில்லை என்றாலும் பெண்மைக் கன்னல்
வேர்கொண்ட விளைவுண்டு! வளைகள் சேர்ந்த
கையில்லை அவளுக்கே என்றால் என்னைக்
கைக்குள்ளே வளைக்கின்ற துடிப்பொன்றுண்டு!
"பொய்யில்லை! அவளெனக்குக் காதற் பிச்சை
போடத்தான் வந்திருந்தாள்!" எனநினைந்தேன்!

நான்பார்த்தேன்! அவள்பார்த்தாள்! என்னைச் சுற்றி
நாலுபெயர் இருப்பதையும் மறந்து விட்டேன்!
தேன்பார்த்த இதழ்விரியத் தெறிக்கும் முல்லைச்
சிரிப்புதிர்த்தாள்! என்னையும்நான் இழந்துவிட்டேன்
வான்பார்த்த உழவன்போல் அசைவே யின்றி
வஞ்சியவள் வாய்ச்சொல்லுக் கேங்கி நின்றேன்.
கூன்பார்த்த பிறைமேலை வானில் தோன்ற
கூடியிருந் தோரெல்லாம் அகற லானார்.

இரவரசன் தோன்றுவதைக் கண்ட மங்கை
எழக்கண்டேன்! யானுமுடன் எழுந்து விட்டேன்!
ஒருவிழியால் அவளென்னைப் பார்த்தாள்! அப்பால்
உதட்டோரம் நகைசேர்ந்தாள்! நடையுஞ்
சேர்த்தாள்
"கருவிழியாள் என்னெஞ்சிற் கனலை மூட்டிக்
கடக்கின்றாள்! ஐயையோ! எச்சில் வாயால்
ஒருமொழிதான் உரையாளா?" எனநினைத்தே
ஓடோடி அவளைப்பின் தொடர்ந்து சென்றேன்.

அறிவியலின் ஆற்றலினால் ஆர வார
ஆட்சியினால் இரவதனைப் பகல்போ லாக்கி
வெறியுணர்வு கொண்டிருந்த நகர்ப் புரத்தின்
வீதிநெடுஞ் சாலைதெரு வெல்லாம் நீங்கி
வறியவர்கள் வாழ்கின்ற இருண்ட சந்தில்
வஞ்சியவள் மறைவாக வந்து நின்றாள்!
பொறியுணர்வு மேலோங்கி நின்ற யானும்
பொல்லாங்கை எண்ணாமல் தள்ளி நின்றேன்!

அவ்வளவில் ஒருகிழவி ஓடி வந்தாள்
அணங்கின்பால் உரிமையுடன் போர்தொடுத்தாள்
எவ்வளவு நேரமடீ! கள்ளீ! என்ன?
இன்றைக்கும் வெறும்வலையா கொண்டு வந்தாய்?
ஒவ்வொருநாள் இப்படியே போக விட்டால்
உருப்பட்டாற் போலத்தான்!" என்றாள். என்னைக்
கவ்வுதற்கு வந்திருந்த தூண்டிற் கன்னி
கடைவிரித்த பாடத்தை ஒப்பு வித்தாள்

"மீனென்று தான்கண்டேன்! ஆனால் அம்மீன்
மென்மேலும் ஏறிட்டுப் பார்த்த தல்லால்
ஏனென்று கேட்கவில்லை! முடிவாய் அஃது
மீனில்லை! வெறும்பாசி என்று விட்டேன்!
நானென்று நினைக்கிறேன்! பாழுந் தெய்வந்
தானென்று நினைத்தாலென் செய்வேன்!" என்றாள்
கூனென்று முதுகுடையாள் இதனைக் கேட்டுக்
கூரம்பு பாய்ச்சுதல்போல் கூற லுற்றாள்:

"காளைக்கு வலைவீசத் துப்பு கெட்ட
காரிகையே! எவ்வாறு நீபி ழைப்பாய்!
நாளைக்கும் பட்டினிதான் இன்று போல!
நாயகனோ நோயினின்று மீள மாட்டான்!
வேளைக்குக் கஞ்சியற்ற உன்கு ழந்தை
விதிமுடிந்து போகுமடி நாளை!" என்றாள்
மூளைக்குள் உளிகொண்டு பிளப்பதைப் போல்
முதியோள்சொல் எனைப்பிளக்கத் திரும்பலானேன்!

கண்ணகியின் சிலையருகே ஓடி வந்தேன்
கண்ணீரைக் காணிக்கை யாக்கி வைத்தேன்!
"பெண்ணினத்தின் தெய்வதமே! உன்னை ஒன்று
பேதையனேன் இரக்கின்றேன்! எங்கள் நாட்டின்
திண்ணமிலா இளம்பெண்கள் கற்பைத் தீய்க்குந்
தீராத வறுமைக்குத் தீவை!" என்றேன்.
"எண்ணியது நடக்கும்போ!" என்னு மாபோல்
ஏந்திழையாள் கைச்சிலம்பை உயர்த்தி நின்றாள்!

—புதுவை சுப்பிரமணியன்.

இனி இடமில்லை!

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் வரிபோடுவதன் மூலம் மாநில அரசு நிதி வசதிகளைப் பெருக்கிக்கொள்வதில் ஏற்கனவே உச்சக்கட்டத்தை எட்டியாகிவிட்டது. ஆகவே புதிய வரிகள் மூலம் மாநில அரசின் நிதி ஆதாரங்களைத் தேடுவதென்பது இயலாத காரியம்.

—திட்டக்குழுத் தலைவரிடம் அண்ணா

KAMALA SUGAR MILLS LTD.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P.O.) UDUMALPET. S. RLY.,

COIMBATORE DIST.

★

LIQUID GLUCOSE "GRADE-A"

WE HAVE STARTED PRODUCTION OF OUR NEW GLUCOSE "GRADE-A" FROM THIS MONTH ONWARDS. THIS GLUCOSE IS PURIFIED BY "DEMINERALISER" WHICH GIVES GOOD COLOUR AND AVOIDS STICKNESS.

SO IT WILL BE A GREAT ADVANTAGE TO THE CONSUMERS OF GLUCOSE LIQUID FOR THE MANUFACTURE OF CONFECTIONARY SWEETS, BISCUITS, SYRUPS AERATED WATERS AND PHARMACEUTICALS.

Our Distributors For Madras, South Arcot, North Arcot and Chingleput Districts:

P. SINGARAVELU,

310, Wall Tax Road, Madras-3.

OUR SALES BRANCHES AT:—

MADURAI: 28-B. ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—8
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.